# குறுங்காப்பியம் பாரதியின் பாஞ்சாலி சபதம் உரைக்கும் அழிவிலா அறக்கருத்துக்கள்

முனைவர் சி. மணிமேகலை
இணைப் பேராசிரியர்

**காப்பிய உத்திகளை கொண்ட குறுங்காப்பியம்**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி. அவன் புரட்சிப் பாவலன், புதுமைக் கவிஞன், பாட்டுத் திறத்தால் இவ்வையத்தைப் பாலித்திட வந்த பாவலன், ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த தமிழ் மண்ணில் வராது வந்த மாமணியாய் விளங்கிய மகாகவி. நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்ற இலட்சியங்களை ஏந்தி எழுதுகோல் பிடித்த எழுத்தாளன். எனவேதான் அவன் தன் எழுத்துகளைச் சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல் புதிது, சோதிமிக்க நவகவிதை என்று அறிமுகம் செய்தான். .அப்பாரதி கம்பனையும் வள்ளுவனையும் இளங்கோவையும் கற்றறிந்தவன். காலத்துக் கேற்ற தமிழ் நூல்கள் செய்து தமிழன்னைக்கு அணிசெய்தவன். எளிய பதங்கள் எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது மக்கள் விரும்பும் மெட்டு ஆகியவை அமையக் காவியம் செய்துத்தருவேன், தமிழ் மொழிக்குப் புதிய உயிர் தருவேன் என்று இலட்சியம் அமைத்துக் கொண்டு பாஞ்சாலி சபதத்தைக் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமல் எழுத விரும்பிய பாரதி காப்பிய உத்திகளை நன்கு பயன்படுத்திக் குறுங்காப்பிய நிலையில் பாஞ்சாலி சபதத்தை ஆக்கியுள்ளான். இதனை விளக்கமுறக்காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காப்பியம் என்ற இலக்கியவகையைப் படைப்போர் அக்காப்பியத்திற்கு தன்னிகரற்ற ஒருவரைத் தலைமைமாந்தராகப் படைப்பர். சிலப்பதிகாரத்திற்குக் கண்ணகியும் மணிமேகலைக்கு மணிமேகலையும் அமைந்தது போல் குறுங்காப்பியமாகிய பாஞ்சாலிசபதத்திற்குப் பாஞ்சாலியே தலைமை மாந்தர் என்று கருதும்அளவிற்கு பாரதியார் காவியம் செய்துள்ளார். நாடும் நாட்டு மக்களும் பிறரும் பஞ்சபாண்டவர்களும் சூதின் பணயப்பொருளாக வைக்கப்பெற்றுத் தருமன் அவற்றை இழக்கும்போது காட்டாத தீவிரத்தைப் பாஞ்சாலியைப் பணயப்பொருளாக வைத்திழந்ததைக் கூறும்போது பாரதியார் எழுதியிருக்கும் அடிகளே பாஞ்சாலி தலைமை மாந்தர் எனக் கருதவைக்கின்றன.

காப்பியத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருள், கூறல் என்னும் மரபுண்டு. பாஞ்சாலிசபதம் தொடங்கும்போது பிரமத்தை வாழ்த்தித் தொடங்குதைக் காணலாம். கலைமகள் வணக்கம் இடம் பெற்றுள்ளது. காப்பியத்தின் வருபொருளை

**“பூணியல் மார்பகத்தால்-ஐவர்**
**பூவை திரெளபதி புகழ்க் கதையை**
**மாணியல் தமிழ்ப்பாட்டால்-நான்**
**வகுத்திடக் கலைமகள் வாழ்த்துகவே”**

என்னும் அடிகளில் அமைத்துள்ளார் இக்காப்பியத்தின் இரண்டாம் பகுதியிலும் பராசக்தி கலைமகள் வாழ்த்துகளை அமைந்திருப்பதைக் காணலாம். இவை காவியமரபைப் போற்றியுள்ளமைக்கான சான்றுகள் எனலாம்.

காப்பியம் பெரும் பிரிவு சிறு பிரிவுகளைக் கொண்டு அமையும். சிலம்பில் காண்டம் என்ற பெரும் பிரிவு உள்ளது. காதை, வரி, மாலை என்னுந்தலைப்பில் சிறுபிரிவுகள் உள்ளன. பாஞ்சாலிசபதம் இரண்டு பெரும் பிரிவுகள் உடையது. முதற் பாகம், இரண்டாம் பாகம் என அவை அமையும். சிறு பிரிவுகளாகச் சருக்கம் இடம்பெற்றுள்ளது. முதற் பாகத்தில் அழைப்பு சருக்கம், தோட்டச் சருக்கம் அமைந்துள்ளன. இரண்டாம் பாகத்தில் அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம் அமைந்துள்ளது. இவ்வாறு காவிய உறுப்புகளாம் பாகம், சருக்கம் என்பன பாஞ்சாலிசபதத்தில் உள்ளன.

காப்பியப் புலவர்கள் தாம் பாடும் காப்பியத்துள் நாட்டு வளம், நகர் வளம், மக்கள் வாழ்க்கை நிலை, இருசுடர்த் தோற்றம், மறைவு முதலானவற்றை அமைத்துப் பாடவேண்டும் என்பர். பாஞ்சாலி சபதம் அழைப்புச் சருக்கத்தில் அத்தினாபுரவளம் சித்திரிக்கப்படுகின்றது. துரியோதனன் வாழும் அரண்மனை வாழ்க்கை வளம் பேசப்படுகின்றது. சித்திரப்பிரத்தத்தில் தருமனுக்கு வந்ததாகக் கூறப் பெறும் வளங்களை எண்ணிப் பொறாமைப்படும் துரியோதனன் கூற்றில் அரண்மனை வளங்கள் அழகுறச் சித்தரிக்கப்பெற்றுள்ளன. விதுரன் பாண்டவர்களை மறு விருந்துக்கு அழைக்க இந்திரப் பிரத்தம் செல்கிறான் செல்லும் வழியில் எண்ணிலாத இயற்கை வளங்களைக் கண்டுசெல்கின்றான்

**“நீலமுடி தரித்த பலமலைசேர் நாடு**
**நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு**
**கோலமுறு பயன் மரங்கள் செறிந்து வாழுங்**
**குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு”**

என்று கூறும் இயற்கை வளப்பகுதியில் காவியத்துக்கு உரிய நாட்டுவளம் பேசப்படுகிறது எனலாம்.

இருசுடர்களாம் ஞாயிறு திங்கள் ஆகிய இவை எழுதலையோ மறைதலையோ காப்பியங்களில் புனைந்துரைப்பர். சிறுகாப்பியம் படைத்த பாரதியார் ஞாயிறு மறையும் அந்திவானத்து அழகுக் கோலங்களைப் பாஞ்சாலி சபதத்தில் அருச்சுனன் திரௌபதைக்குச் சுட்டிக்கூறுவது போல் அமைத்துள்ளார். இயற்கையின் எண்ணிறந்த அழகுக்கோலங்களை கண்டு மகிழும் வாய்ப்பிருந்தும் நம்மவர்கள் அவற்றைக் கண்டு அனுபவிக்கும் பயிற்சியுடைவராக இல்லையே என்ற மனக்குறையை பாஞ்சாலி சபதத்தில் அந்திவான அழகைச் சித்தரிக்குமிடத்தில் உணர்த்தியுள்ளார். “என்னடீ இந்த வண்ணத்தியல்புகள்! எத்தனை வடிவம்! எத்தனை கலவை! தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சிவிட்ட ஓடைகள்!” என்ற வருணனைப் பகுதி காவியத்தின் மாலை வருணனை பகுதியாக உள்ளது. காப்பியத்தில் முடிபுனைதல், களித்து மகிழ்தல், சூது தூது முதலியன இடம் பெறும் என்பர். காப்பிய இலக்கணம் உணர்ந்த பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் இந்திரப்பிரத்த நகரில் தருமன் முடிபுனைந்து மாமன்னனாக விழாவெடுத்து மகிழ்ந்ததில் முடிபுனைதலையும் களித்து மகிழ்தலையும் அமைத்துள்ளார். சகுனி தருமன் சூதாட்டம், விதுரன் தூது முதலியன காப்பிய இலக்கணத்திற்கேற்ப அமைக்கப்பட்டவையாகும்.

காப்பியப் புலவர்கள் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடைபெறும் போராட்டங்களைச் சித்தரிப்பர். நல்லவர்களும் தெரிந்தே தீமையின் வலைக்குள் சிக்கித்திணறுவர். தெரிந்தே விழுவதை விதி எனச் சமாதானம் கூறி ஆற்றுவிப்பர். இத்தகைய தெரிந்தே திரிதராட்டிரன் பாண்டவர்களை விருந்துக்கு அழைக்கின்றான். அதனை உணர்ந்திருந்தும் திரிதராட்டிரன் கட்டளையை எற்று விதுரனும் பாண்டவர்களை அழைத்துவரப் போகின்றான். துரியோதனன் சூழ்ச்சியை உணர்ந்தும் தடுக்கமுடியாத நிலையில் தவிக்கும் திரிதராட்டிரன் விதி இது விதி மகனே எனக் கூறிச் செயல்படுகின்றான். சூதின் தீமையை உணர்ந்திருந்தும் சகுனியுடன் தருமன் சூதாட இசைந்து சூதாடித் தோற்கிறான். நன்மையின் பக்கம் இருப்பவர்களும் தீமைவரும் என்று தெரியும். தெரிந்த பின்னும் தீமையின் வலையில் வீழ்கிறார்கள். இவ்வாறு விழுவது தான் விதி. இவ்விதியின் ஆற்றலைக் கவிதையில் வடிப்பது காவியப் புலவர்களுக்கு அமைந்த விதி. விதி வகுத்த போழ்து யாரும் தப்ப முடியாது என்பதைப் பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் பலவிடங்களில் கூறியுள்ளார்.

**“நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்**
**நழுவி விழும் சிற்றெரும்பால் யானை சாகும்”**

என்று வரும் பகுதி விதியின் ஆற்றலை பாரதி காட்டும் இடங்களுள் ஒன்று.

பாரதியார் தன்னுடைய இலட்சியத்திற்கு ஏற்ப இனிய எளிய தமிழில் ஓரிரண்டு கல்விப் பயிற்சி உடையோரும் புரிந்து கொள்ளும் முறையில் யாவரும் அறிந்த மகாபாரதக் கதையின் ஒரு பகுதியை எடுத்துக் காப்பியமாக்கியுள்ளார். குறுங்காப்பியமாக அவர் எழுதியிருப்பினும் காப்பியத்திற்குள்ள அழகு கெடாமல் அமைத்துள்ளார் எனலாம். பெண்மைக்கும் தாய்மைக்கும் மதிப்பளிக்கும் வகையிலும் நாட்டுப்பற்றை ஊட்டும் வகையிலும் குறுங்காப்பியமாகப் பாஞ்சாலி சபதத்தை ஆக்கித்தந்தள்ளார் எனலாம்.

தமிழ்மொழிக்குக் காலத்திற்கேற்ப காவியங்கள் செய்து தரவேண்டும் என்பது பாரதியின் கொள்கை. புத்தம்புதிய நூல்களில் தமிழுக்கு வரவேண்டும் என்ற பேரவாக் கொண்ட பாரதியார் தான் வரும்காலத்திற்கேற்ப எளிய இனிய தமிழில் தீஞ்சுவை காவியங்கள் பல செய்தளிக்க வேண்டும் என்ற நிலையில் பிறருக்கு வழிகாட்டியாய் அமையும் வண்ணம் பாஞ்சாலி சபதம் என்னும் குறுங்காப்பியத்தைச் செய்தார். அக்குறுங்காப்பியம் செய்யும்போது காப்பியங்களுக்கு என விதிக்கப் பெற்றுள்ள அமைப்பும் அழகும் கெடாதவாறு திட்டமிட்டு பாஞ்சாலி சபதத்தை எழுதினார். பொதுவாக வாழ்க்கையின் மெய்ம்மைகளையும் அறக் கருத்துகளையும் தக்க இடங்களில் அமைத்துக் கற்போர்க்கு இன்புறுத்துதலையும் அறிவுறுத்துதலையும் காப்பியங்களில் இடம் பெறுமாறு அமைத்தல் வேண்டும் என்பர். முன்னோர் மொழிந்த நன்னெறிகளையும் வாழ்ந்து பெற்ற அனுபவங்களையும் உண்மைகளையும் கதைப்போக்கில் இன்புற அமைத்து அறிவுறுத்தவேண்டும் என்பது இதன் கருத்தாகும். இத்தகைய காவியநெறியைப் பாரதியாரும் பாஞ்சாலி சபதத்தில் பயன்படுத்தியுள்ளார். வேதம் உபநிஷத் கீதை முதலான நூல்களிலுள்ள அறக்கருத்துகளையும் தத்துவஞானிகள் கண்டு கூறிய வாழ்க்கை மெய்யம்மைகளையும் பாஞ்சாலி சபதத்தில் அழகுற அமைத்துப் பாடியிருக்கிறார் பாரதியார்..

துரியோதனன் பாண்டவர்கள் மீது வெறுப்புக்கொண்டு அவர்களை அவமானப்படுத்த நினைக்கின்றான். அவர்கள் செல்வங்களைக் கண்டு பொறாமைப்பட்டு அவற்றைக் கைப்பற்ற முயற்சி செய்கின்றான். அதற்கான சூழ்ச்சிசெய்து அதை நிறைவேற்றத் தன் தந்தையின் உதவியை நாடுகிறான். அப்பொழுது துரியோதனன் திருதராட்டினனிடம் கூறும் வார்த்தைகளில் செய்க பொருளை என்ற உலகியல் தத்துவத்தை கூறுகிறான். போதும் என்ற மனத்தோடு நாடாளும் மன்னன் வாழக்கூடாது என்றும் மேலும் மேலும் பொருள் ஈட்டுவதிலும் பகைவரை தாழ்த்துவதிலும் சலிப்படைதல் கூடாது என்றும் கூறுகின்றான். அவனது கூற்றில் ஒருவகையான உலகியல் தத்துவம் இடம்பெறுகிறது. துரியோதனன் கருத்தாக சகுனி திருதிராட்டினனிடம் கூறுமிடத்தில் இவ்வுலகியல் தத்துவம் வருகின்றது. சகுனி கூறும் போது

**“ஆரியர் செல்வம் வளர்தற்கே**
**ஆயிரம் நித்தம் புதியன-கண்டு**
**வாரிப் பழம்பொரு ளெற்றுவார்-இந்த**
**வண்மையு நீயறி யாததோ”**

என்கின்றான். துரியோதனன் தன் தந்தையிடம் கூறும்போதும் போதும் என்ற மன நிறைவோடு ஒரு மன்னன் வாழ்வது அவனுக்கு அழிவைத்தரும் என்கின்றான். மன்னவர் மனநிறைவு பெறாமல் இரக்கமில்லாமல் எதிரிகளை துன்புறுத்திக் கொண்டேயிருக்க வேண்டும் என்கின்றான். போதும் என்ற மனத்துடன் இருப்பது அழிவைத் தரும் என்கின்றான். துரியோதனன் கூற்றில் ஒருவகையான உலகியல் தத்துவம் வெளிப்படுகிறது.

**“பழைய வானிதி போதுமென் றெண்ணிப்**
**பாங்கு காத்திரு மன்னவர் வாழ்வை**
**விழையு மன்னியர் ஒர்கணத் துற்றே**
**வென்ற ழிக்கும் விதியறு யாயோ**
**குழைத லென்பது மன்னவர்க் இல்லை**
**கூடக் கூடப்பின் கூட்டுதல் வேண்டும்**
**பிழையென்றே அரசர்க் குண்டு கண்டாய்**
**பிறரை தாழ்த்து வதிற்சலிப் பெய்தல்”**

துரியோதனனுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்துடையவன் திருதிராட்டினன். சகுனியின் தொடர்பால் துரியோதனன் கெட்டு வருகின்றான் என்பது திருதிராட்டிரன் முடிவு. துரியோதனனுடைய பொறாமைத் தீயைத் தன் நேசவார்த்தைகளால் கொழுந்து விட்டெரியப் பண்ணும் சகுனியைக் கண்டு திருதராட்டிரன் வருந்துகிறான். துரியோதனனுடைய ஆசைத்தீயை வளர்த்த சகுனி திருதிராட்டினனைப் பார்த்துச் செல்வதாபத்தை நெஞ்சில் வளர்த்திடல் மன்னர் சாத்திரத்தே முதற் சூத்திரம் எனப் பொருள்சேர்த்தலின் பெருமையைக் குறிப்பிடுகின்றான்.

‘அன்னியர் செல்வம் மிகக்கொண்டு வாழ்தல் ஆபத்து அது அரசர்க்கு ஆபத்து’ என்ற சகுனியின் உலகியல் தத்துவக் கருத்துக்கு திருதிராட்டிரன் உடன்படாமல் போதுமென்ற மனத்தோடு பொறாமையின்றி வாழவேண்டும் என்றான். தருமன் நடத்திய பெருவிழாவில் முதல் மரியாதையைக் கண்ணனுக்குத் தந்தான். துவாரகைக் கண்ணனுக்கு ‘முதலர்க்கியம்’ காட்டியது துரியோதனனுக்குப் பிடிக்காமல் பழிக்கிறான். அச்செய்தியைச் சகுனி மூலமாகக் கேட்ட திருதராட்டிரன் ‘கண்ணனை யாரென்று எண்ணினீர்?’ என்று பதிலிறுக்கும் போது கண்ணன் பெருமை தத்துவக் கருத்துகளோடு வெளிப்படுத்தப்படுகின்றது.. வேத முதல்வனாகிய கண்ணன்தான் ஆதிப்பரம்பொருள் நாராயணன் என்றும் அவன் வைகுண்டநாதன் என்றும் அவனே ஞானமென்றும் பெருமை பேசிய திருதராட்டிரன் தத்துவ உண்மைகளை அழகுற வெளிப்படுத்துகிறான். மேலும் உயர்ந்த சிந்தனைகளைத் திருதராட்டிரன் மூலம் பாரதி பல இடங்களில் வெளிப்படுத்துகிறார். ஆண்மையுடன் செயல்புரிதல் பிறர் பொருளைக் கவர நினைக்கும் செயலைக் கைவிடுதல் போர்க்களம் சென்று எதிரிகளை வென்று மேம்படுதல் சூழ்ச்சியைக் கைவிட்டு வஞ்சகமின்றிப் போரிட்டு வாகை ‘சூடுதல்’ தம் கருத்தில் தளர்வின்றி ஈடுபடுதல் மற்றோர் பொருளை இம்மியுங் கருதாது இருத்தல், சார்ந்து வாழ்வோர்க்குப் பாதுகாப்புத் தந்து காப்பாற்றுதல் முதலான வாழ்வியல் கருத்துகளைத் திருதராட்டிரன் கூறுவதாக பாரதி அமைத்துள்ளார்.

**“தம்மொரு கருமத்திலே – நித்தத்**
**தளர்வது முயற்சி மற்றோர் பொருளை**
**இம்மியுங் கருதாமை – சார்ந்**
**திருப்பவர் தமைநன்கு காத்திடுதல்**
**இம்மையில் இவற்றினையே – செல்வத்**
**திலக்கண மென்றனர் மூதறிஞர்”**

என்பன அக்கருத்துடை அடிகளாகும்.

விதியின் ஆற்றலை விளக்குவது போல் அமைத்திருக்கும் பகுதிகளில் பாரதியார் வாழ்க்கை மெய்ம்மைகளை வெளியிட்டுள்ளார். காரணமில்லாமல் காரியம் இல்லை என்கிறார். சங்கிலித் தொடர்போல் காரணகாரிய இயைபுடன் இவ்வுலக நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்கிறார். வாழ்க்கை என்பது நிலையற்றது. தோன்றி அழிவதுதான் வாழ்க்கை. அவ்வாழ்க்கையில் துன்பம், இன்பம் வெறுமை என்பன பிரிக்கமுடியாது பிணைந்திருப்பன. உயிர்க்கூட்டம் அனைத்திற்குமுள்ள பொதுவிதி உண்டு. நித்தம் தத்தமக்குரிய கடமையைச் செய்தலே உயர்ந்த ஒழுக்கம். இவ்வாறு பலப்பல வாழ்வியல் அறங்களைப் பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் இடையிடையே அமைத்து அழகு செய்துள்ளார்.

முன்னோர் மொழிந்த நல்லுரைகளைப் போற்றிக் காப்பியம் செய்யும் பாரதியார் ‘அறிவொன்றே தெய்வம்’ என்ற நிலையில் பகுத்தறிவோடு வாழவேண்டும் என்று வற்புறுத்துகிறார். பழமையைப் போற்றுக என்றும் பழமையிலுள்ள நன்மையை மட்டுமே போற்றவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். அறிவாராய்ச்சி இன்றி முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றுவதை வெறுக்கிறார். நமக்கு முன்பிருந்தவர்களெல்லாம் முனிவர்கள் என்று எண்ணாமல் அவர்களுள்ளும் மூடர்கள் இருப்பர் என்ற பகுத்தறிவுணர்வோடு வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அவ்வாறு அறிவுறுத்தும் பகுதிகளில் உலகியல் தத்துவங்களைப் பொருத்தமுற அமைத்துப் பாடியுள்ளார். “முன்பிருந்தோர் காரணத்தாலே மூடரே பொய்யை மெய் எனலாமா?” என்று கூறும் பகுதி இதற்குச் சான்றாகும். அருச்சுனன் பீமனிடம் கூறும் வார்த்தைகளில்

**“தருமத்தின் வாழ்வு தனை சூது கவ்வும்**
**தருமம் மறுபடி வெல்லும்”**

என்ற மெய்ம்மையையும்

**“கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்”**

என்று கூறும் நம்பிக்கை அறத்தையும் பாரதியிடம் காண்கிறோம். இவ்வாறு பாஞ்சாலி சபதத்தில் பல இடங்களில் உலகியல் தத்துவங்களையும் அந்தமில் இன்பம்தரும் அழிவிலா அறக்கருத்துகளையும் அழகுற அமைத்துப் பாடியுள்ளார் எனலாம்.

**பார்வை நூல்கள்**

1. பாரதியார் பாஞ்சாலி சபதம்
2. பாரதியின் கவிதைகள்
3. தமிழண்ணல் தமிழ் இலக்கிய வரலாறு